# Abstract

The research purpose is forwarded in order to find the important factors in the satisfaction of the primary male teaches who are teaching in the difficult areas and to find ways to increase the satisfaction of the male teachers and to bring forth suitable solution. Research of literature is connected with my research. The factors of which support for the satisfactions of male teachers. This has been identified in three types. Eleven factors are on behalf of Teachers four factors are on behalf of school is. Three factors are on behalf of society.Question air, interview, observation, chart were used a data collecting method in order to collect details from principals, teachers and students. The research has been reformed by lecturer, advice and pretest to reach the purpose. The sample was selected from the schools above type II out of 65 schools. Out of 49 research primary class teachers 49 of them are – teaching in secondary and advanced level leaning primary classes. 20 primary lady teachers, 10 Principals from each schools each person. Data analyzing was made with the technique of comparatively, average, percentage, chart, samples and explanation. It indicates that the male teachers who obtained teaching in the primary classes they more towards secondary and advanced level for teaching purpose. There we can find close relationship among social related factors, male teachers among social related factors, Male teacher related factors and school related factors. When primary teachers teaching in three secondary and advanced level due to that work plan helps only partly to the primary section and mostly male teachers satisfaction nearly on students. Teachers and parents relationship.

# ஆய்வுச் சுருக்கம்

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவில் கற்பிக்கின்ற ஆண் ஆசிரியர்களது தொழில் திருப்தி சம்பந்தமான முக்கியமான காரணிகளைக் கண்டறிந்து அவ்வாசிரியர்களது தொழில் திருப்தியை மேம்படுத்தும் வழிமுறைகளை இனங்கண்டு, பொருத்தமான முறையில் தீர்வுகளை முன்வைக்கும் நோக்குடனேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளனது ஆய்வுடன் தொடர்புபட்ட ஆய்வுகள் என்ற அடிப்படையில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட நோக்கங்களின் அடிப்படையில் ஆண் ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் மூன்று வகையினதாக இனங்காணப்பட்டன. அவை ஆசிரியர் சம்பந்தமான 11 காரணிகளும், பாடசாலை சம்பந்தமான 02 காரணிகளும், சமுதாயம் சம்பந்தமான 02 காரணிகளும் உள்ளடக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்காக வினாக்கொத்துக்கள், நேர்காணல் மற்றும் அவதானிப்பு படிவங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள கஷ்டப்பிரதசப் பாடசாலைகள் 65 இல் வகை - *II* க்கு மேற்பட்ட 10 பாடசாலைகளும், ஆரம்பக்கல்வி நியமனம் பெற்று இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புக்களுக்கு கற்பிக்கும் 49 ஆண் ஆசிரியர்களில் 25 பேரும், ஆரம்பக்கல்விப் பெண் ஆசிரியர்களில் 05 பேரும் மற்றும் மாதிரிப் பாடசாலைகள் 10 இல் தலா ஒரு அதிபர் வீதம் 10 அதிபர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் தொகை ரீதியாகவும், பண்பு ரீதியாகவும், ஒப்பீடு, சராசரிகள், நூற்றுவீதம், அட்டவணைகள், சட்ட வரைபுகள், பரிதிகள், விளக்கம் போன்ற முறைகளைப் பயன்படுத்தி தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவாக ஆரம்பக்கல்வி நியமனம் பெறும் ஆண் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக ஆரம்பக்கல்வி வகுப்புக்களுககுக் கற்பிக்காது விலகிச்சென்று இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புக்களுக்குக் கற்பிப்பதற்கான காரணிகளாக ஆரம்பக்கல்வி ஆண் ஆசிரியர்கள் சம்பந்தமான காரணிகள், பாடசாலைக்காரணிகள், சமுதாயக் காரணிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. மற்றும் ஆரம்பக்கல்வி ஆண் ஆசிரியர்களின் விலகிச்சென்று இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புக்களுக்குக் கற்பிக்கும் போது பாடசாலைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள் பகுதியளவிலேயே ஆரம்பக்கல்வி வகுப்புக்களுக்கு உதவுகின்றன ன்பதை ஆய்வின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.